ஸ்ரீ தந்வந்தரயே நம:

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டல மாதப் பத்திரிகை.

விரோதிகிருது
புரட்டாசி

OCTOBER
1971

தொகுதி 33
பகுதி 10

Vol. 33
No. 10

ஆசிரியர்:
வைத்ய வாசஸ்பதி பண்டிட் P. S ராம சர்மா.

பிரசுரகர்த்தா:
வைத்ய T. S. ஈச்வரன், L. I. M.

வருஷச் சந்தா
ரூ. 5/-

Annual
Subscription
Rs. 5/-

ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தீ	...	181
பிரயோகஸாரம்	...	184
ஆரோக்கிய கல்பத்துருமம்	...	190

காரியாலயம்: 27, சின்னக்கடைத் தெரு, தெப்பக்குளம், திருச்சி.

வைத்யரத்னம் P. S. வாரியருடைய

ஆர்ய வைத்தியசாலா

கோட்டக்கல். (கேரள ராஜ்யம்)

Registered Trade Mark.

தலைமை ஆபீஸ் போன் : கோட்டக்கல் எக்ஸ்சேஞ்ஜ்
ஆபீஸ் - அட்மினிஸ்டிரேடர் - மானேஜர் தொடர்புடன் போன் நெ. 31

நர்ஸிங்ஹோம்	போன் நெ. 44
தலைமை வைத்யர்	போன் நெ. 25
மானேஜிங் டிரஸ்டி	(வீடு) போன் நெ. 27
	(ஆபீஸ்) போன் நெ. 61
மானேஜர்	(வீடு) போன் நெ. 26

சென்னை கிளை :

No. 1, கிருஷ்ணமாசாரி ரோடு,
நுங்கம்பாக்கம், சென்னை 34. போன் எண் 811275

மற்ற கிளைகள் :

1. கோழிக்கோடு (போன் 2155)
2. பாலக்காடு (போன் 104)
3. பாலக்காடு ஸேல்ஸ் டிபோ (போன் 584)
4. ஆல்வாய்
5. ஈரோடு (போன் 172)
6. திரூர் (போன் 31)
7. எர்ணாகுளம் (போன் 33026)
8. திருவனந்தபுரம் (போன் 3924)

மேலும் நூற்றுக்கு மேற்பட்ட அதிகாரம் பெற்ற ஏஜண்டுகளும், டெபோக்களும்

சுத்தமானதும், உயர்தரமானதுமான ஆயுர்வேத மருந்துகளும், உயர்ந்த வைத்ய ஆலோசனைகளும் எமது தலைமை ஆபீஸிலும், கிளைகளிலும் கிடைக்கும். எமது தலைமை வைத்யரால் கடிதமூலமாக வைத்ய ஆலோசனைகள் அளிக்கப்படும். நவரைக்கிழி, பிழிச்சல் முதலிய விசேஷ சிகித்ஸைகள் தலைமை வைத்யர் மேற்பார்வையில் எமது கோட்டக்கல் **கோல்டன் ஜூபிலி நர்ஸிங்ஹோமில்** நடத்தப்பெறும்.

மற்ற விபரங்களுக்கு :—

மானேஜிங் டிரஸ்டி.
ஆர்ய வைத்யசாலை, கோட்டக்கல்.

திருச்சி ஆயுர்வேதிக் யூனியன்
பிரைவேட் லிமிடெட்

(ஸ்தாபிதம் 1939)

விற்பனை அண்டு ரிஜிஸ்டர்ட் ஆபீஸ்
31-A, சின்னகடைத் தெரு,
திருச்சிராப்பள்ளி-2.
போன் எண் : 4202.

சிறந்த ஆயுர்வேத மருந்துகளுக்கு முப்பது ஆண்டுகளாக பிரஸித்தமான இடம்.

.:.

101 ஆவர்த்தித க்ஷீரபலா தைலம்

(200 மி.கி. காப்ஸ்யூல்)

200	100	50
ரூ. 10-00	ரூ. 5-25	ரூ. 2-75

பாக்கிங், தபால் செலவு தனி.

சாஸ்திரீய ரீதியில் தகுந்த நிபுணர்களின் மேற்பார்வையில் தயாரிக்கப் பெற்ற மற்ற எல்லா ஆயுர்வேத மருந்துகளும் இங்கு கிடைக்கும்.

வைத்தியர்களுக்கும் பொதுமக்களுக்கும்
— மிகவும் நம்பிக்கையான இடம் —

T. S. ஈச்வரன், L.I.M.
மானேஜிங் டைரெக்டர்.

FOR PURE MUSK, KASHMIR SAFFRON,
GOROCHAN & INDIAN CRUDE DRUGS

WRITE TO

M/s. KALIA BROTHERS (Regd.)

Wholesale Musk & Indian Drugs Merchants,

JULLUNDUR CITY (PUNJAB)

Gram : KALIA | **Phone : Office - 3232**
Resi. - 4343

சுத்தமான கஸ்தூரி, காஷ்மீர் குங்குமப்பூ,
கோரோசனை மற்றும் மருந்து சரக்குகட்கு

அடியிற்கண்ட விலாசத்திற்கு எழுதவும் :

கலியா பிரதர்ஸ் [ரிஜிஸ்டர்ட்]

கஸ்தூரி மருந்து சரக்கு மொத்த வியாபாரி,

ஜல்லந்தர் ஸிடி (பஞ்சாப்)

தந்தி : KALIA | போன் : ஆபீஸ் - 3232
வீடு - 4343

தந்தி : "அம்ருதம்" P. B. No. 1382. போன் : 26006

தி ஆர்ய வைத்திய பார்மஸி

(கோயமுத்தூர்) லிமிடெட்.,

தலைமை ஆபீஸ்: 366, திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18

THE ARYA VAIDYA PHARMACY (COIMBATORE) LTD · AVP

உண்மையான ஆயுர்வேத
மருந்துகளுக்கும்
சிகிச்சைகளுக்கும் சிறந்த இடம்.

எங்களுடைய கிளைகள் :

1. 23 B, பூஸா ரோடு, புது டில்லி : போன் : 585687
2. மொயிதீன் பள்ளி ரோடு, கள்ளிக்கோட்டை 1 ,, 2984
3. கௌடியா மடத்தெரு, மதராஸ்-14 ,, 85752
4. வளிஞ்ஞம்பலம், எர்ணாகுளம், கொச்சின்-18 ,, 32219
5. பிள்ளையார் கோயில்ரோடு, கண்ணனூர்-1 ,, 92
6. மார்க்கெட் ரோடு, பாலக்காடு-1 ,, 195
7. கடைவீதி, பொன்னானி ,, 41
8. ரௌண்ட் வெஸ்டு, திருச்சூர்-1 ,, 378
9. கோர்ட் ரோடு, ஆலத்தூர் ,, 87
10 மெயின் ரோடு, கஞ்சிக்கோடு
11. ரயில்வே ஜங்ஷனுக்கு எதிரில், கோயமுத்தூர்-18,, 33758
12 இந்திரா பில்டிங், கள்ளிக்கோட்டை-2 ,, 4891
13. 229, ராஜவீதி, கோயமுத்தூர்-1 ,, 33988
14. T. T. 384 K. டெலிச்சேரி ரோடு கண்ணனூர்-2
15 No. 263, 64 11 வார்டு, மெயின் ரோடு, எடப்பாள் (பொன்னானி)

பாக்டரி :
கஞ்சிக்கோடு (கேரளா)
(போன் : 2)

நர்ஸிங்ஹோம் :
திருச்சி ரோடு, கோயமுத்தூர்-18.
(போன் : 22194)

மேலும் விபரங்களுக்கு விண்ணப்பம் செய்க :—

ஆர்ய வைத்தியன் P. V. ராமவாரியர்
பிரதம வைத்தியர் & மானேஜிங் டைரக்டர்.

வாரியர்

க்ஷீரபலா 101

ஸர்வாங்க வாதம், பாரிச வாயு முதலிய எல்லாவித மான வாத நோய்களேயும் குணப்படுத்தக்கூடிய மிகச் சிறந்த மருந்து. வாயுவினுல் ஏற்படக்கூடிய மூச்சுப் பிடிப்பு, மார்பு வலி, விலாப்புறங்கள் வலி, முதுகு வலி, சந்துகள் தசை நார்களில் வலி, வீக்கம், கை கால் வலி முதலிய எல்லாவிதமான நோவுகளேயும் நிச்சயமாகக் குணப்படுத்தும். மற்றும் நரம்புகள் சம்பந்தப்பட்ட விரல் நடுக்கம், நாக்குக் குளறல், கண்-காது கோளாறுகள், ஒருத்தலேவலி முதலிய கோளாறுகளேயும் குணப் படுத்தும் :

ரத்த அழுத்தம் [பிளட் பிரஷர்] என்ற வியாதியை குணப்படுத்தவும், வராமல் தடுக்கவும் நிகரற்றது.

ஊமையடிகளுக்கு இதைவிட சிறந்த மருந்து கிடையாது.

பிரஸவித்திருக்கும் பெண்களுக்கும் வாயுவை சீராக்கி உடம்பை தேற்றும்.

வயோதிகர்கள் இதை தினசரி உபயோகித்து வந்தால் வாத ரோகங்களும் விருதாப்பியத்தினுல் ஏற் படும் நரம்புத் தளர்ச்சியும், புலன்களின் சக்திக் குறைவும் ஏற்படாமல் ஆரோக்கியத்துடன் இருக்கலாம்.

விலே 25 ML. ரூ. 7-00; 12 ML. ரூ.3–75

ஆரிய வைத்தியர் கே. எஸ். வாரியர் அவர்களின்

அஷ்டாங்க ஆயுர்வேத சாலா,

சைனுபஜார், தெப்பக்குளம் போஸ்ட், திருச்சி-2.

PHONE : 5441 வீடு போன் : 6074

[1936-ல் திறுவப்பட்டது.]

கஸ்தூரி, குங்குமப்பூ, மற்றும் இதர
உயர்ந்த மருந்து சரக்குகளுக்கு
நம்பிக்கையான இடம்

BHALLA BROTHERS (Regd.)

LUDHIANA (India)

IN THE SERVICE OF AYURVEDA SINCE 1934

SUPPLYING PURE ARTICLES.

ஆங்கிலம் அல்லது ஹிந்தியில் எழுதவும்

மூலிகை நாட்டு மருந்துச் சரக்குகள்
சாஸ்திரீயமான ஆயுர்வேத மருந்துகள்
இவைகளுக்கு நம்பிக்கையான இடம்

K. L. TALWAR & BROS.,

MUSK MERCHANTS,

P. B. No. 17, LUDHIANA.

விலைப் பட்டியல் கேட்லாக்களுக்கு எழுதவும்.

நியூ லக்ஷ்மீ டிஸ்பென்ஸரி

(நியூ பிருந்தாவனம் சமீபம்)

கீழ ராஜ வீதி, புதுக்கோட்டை.

குழந்தைகளுக்கும் பெரியவர்களுக்கும்
சிறந்த முறையில் வைத்யம்
செய்யப்படும்.

வைத்யர்
N. வைத்யநாதன், R. M. P.

FOR
ALL YOUR REQUIREMENTS
OF
MUSK, SAFFRON, KANMADAM
(SHILAJIT) AND INDIAN HERBS Etc.

Please Contact :

PURI BROTHERS (REGD.)

MUSK MERCHANTS

JULLUNDUR-1

Grams : "VENKATESH" Phone : **3923**

வைத்திய சந்திரிகா

தமிழ்நாடு ஆயுர்வேத மஹாமண்டலத்தின் மாதப் பத்திரிகை.

தொகுதி 33	விரோதிகிருது புரட்டாசி	பகுதி 10
Vol. 33	1971 அக்டோபர்	No. 10

॥ श्री धन्वन्तरये नमः ॥

उदेतु हृदयाकाशे गुरुर्वैद्यकलानिधिः ।

यदीयचन्द्रिका वैद्यसंशयध्वान्तनाशिनी ॥

நம: சிவகுமாராய.

ஸ்ரீ தந்வந்தரி ஜயந்தி

ஆரோக்கிய தேவதையான ஸ்ரீ தந்வந்தரிப்பெருமாள் ஜயந்தித் திருநாள் நாளது 17—10—1971 ஞாயிறன்று வருகிறது. வைத்யர்கள் இறைவனை வழிபட்டு ஹஸ்த ஸித்தி பெறக் கோரப் பெறுகிறார்கள்.

ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீராமர் பரதனிடம் ராஜ்யத்தின் யோக க்ஷேமங்களைப் பற்றி விசாரிக்கும் போது வைத்யர்களை நன்கு ஆதரிக்கிறாயா? என்று வினவுகிறார். இன்றும் பல இடங்களில் பல நூல்களில் வைத்யர்களுக்கு மிகுந்த மதிப்பு கொடுக்கப்பட்டிருக்கிறது. அதிலும் சுதேச வைத்யம் தொன்று

தொட்டு தைவீக வைத்யம் என்று சாஸ்திரங்களிலும் கூறப்பட்டிருப்பதுடன் ஜனங்களுக்கும் அதில் நம்பிக்கை இருந்து வருகிறது. இதன் அறிகுறியாக பல மருந்துகள் பலமூலை முடுக்குகளில் உள்ள வைத்யக் குடும்பங்களில் ஆச்சரியமான பலனைத் தருபவனவாக இருந்து வருவதைக் காண்கிறோம்

சுதேச வைத்தியத்தை மனிதவைத்யம் ராக்ஷஸ வைத்யம் தைவவைத்யம் என மூன்று கூறுகளாகக் கூறுவர். மூலிகைகளால் செய்யக் கூடிய முறைக்கு மனித வைத்யம் என்றும் ரஸஔஷதங்களுக்கு விசேஷ தைவீக சக்தி உள்ளதால் அதை தைவவைத்யம் என்றும் சஸ்திரசிகித்ஸை மிக மன உறுதியுடனும் துணிச்சலுடனும் கைக்கொள்ளப்பட வேண்டியதால் அதை ராட்சஸ வைத்யம் எனவும் கூறுவர். இம் மூன்று பிரிவுகளும் நல்ல பயன் தரக்கூடிய வகையில் நம் முன்னோர்கள் பயின்று தொழில் நடத்திக் காண்பித்து உள்ளனர். அரசாங்கம் நம் கையை விட்டுப் போன பிறகு எல்லாத்துறைகளிலும் ஆதரவு மங்கி க்ஷீணதசையை அடைந்தது. பலகாலமாக பல பெரியோர்கள் பல முயற்சிகளை எடுத்துக்கொண்டு மிகப் பிரயாசையுடன் மாகாண ஆயுர்வேத மண்டலங்களையும் அகில இந்திய ஆயுர்வேத மண்டலத்தையும் ஸ்தாபித்து முன்னேற்றத்திற்காக சுய முயற்சியாலேயே பாடுபட்டு வந்தனர். எவ்வளவு திறமை இருந்தாலும் அரசாங்க ஆதரவு இல்லாவிடில் அதற்கு மதிப்பு ஏற்படுவது கிடையாது அதிலும் நமது தேசீய வைத்ய விஷயத்தில் இது அனுபவபூர்வமான விஷயமாகும். சில காலத்திற்கு முன் சில நல்ல நோக்கம் கொண்டவர்கள் கையில் அதிகாரம் இருந்தபோது ஒவ்வொரு மாகாணம்தோறும் மத்ய போர்டு ஒன்று ஏற்படுத்தப்பட்டு அதன் மூலமாக வைத்யர்களுக்குக் கல்வியும் பதிவும் (Registration) ஏற்படுத்தப்பட்டது.

ஆனால் அதனால் வைத்தியர்கள் எதிர்பார்த்த அளவு பயன் பெறவில்லை. சுதேச வைத்யர்களின் அந்தஸ்தும் சம்பளமும் சமநிலைக்குக் கொண்டுவரப்படவில்லை. இதனாலும் அந்தந்த மொழிகளில் அந்தந்த வைத்தியத்தைப் படிக்க பயிற்சி போதாததாலும் வைத்ய அபிவிருத்திக்கு தேக்க நிலை ஏற்பட்டது. தற்சமயம் ஒரு செவ்வானம் தோன்ற ஆரம்பித்துள்ளது. சூரியோதயத்திற்கு முன்பும் சூரியாஸ்தமன காலத்திலும் காணக் கூடியது. ஆனால் சூரியோதயத்திற்கு முன்பு உள்ள அருணோதயமாக ஏற்பட்டால் அது இருள் நீங்க ஹேதுவாக இருக்கும்.

தற்சமயம் மத்ய அரசாங்கத்திலேயே இந்திய வைத்யத்திற்காக ஒரு கூட்டம் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதற்கு இந்தியன்

மெடிசன் சென்டிரல் கௌன்ஸில் ஆக்ட் 1970 என்று தலைப்பு கொடுக்கப்பட்டுள்ளது. இது விஷயமான பூரா விபரங்களும் பின்பு நமக்கு நேரில் Act கிடைக்கும்போது வெளியாகும். இதன் முக்ய மான குறிக்கோள் இந்திய வைத்யர்களுக்கு அகில இந்தியப்பதிவு முறை ஒன்றை ஏற்படுத்தி இந்திய வைத்யர்களை எல்லாம் ஒன்றாக இணைத்துச் செயல்பட வேண்டும் என்பதே. மாகாணங்களில் இன்றுவரை பதிவு செய்யப்பட்டவர்கள் வேறு மாகாணத்தில் தொழில் நடத்த வேண்டுமானால் அந்த மாநிலத்திலும் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்றுள்ள சட்டம் மத்ய அரசாங்கத் தில் பதிவு செய்து கொண்டவர்களில் விஷயத்தில் பொருந்தாது. அவரவர்கள் படித்துப்பெற்ற அத்தாட்சி பத்திரத்தில் எந்த எந்த யோக்யதாம்சம் கொடுக்கப்பட்டிருக்கிறதோ அதன்படி எல்லா மாகாணங்களிலும் (இந்தியா பூராவும்) வைத்யத்தொழில் நடத்த முடியும்.

தவிர சுத்தமான இந்திய வைத்யம் கற்பிக்கப்படும் என்று கௌன்ஸில் தீர்மானித்துள்ளது. இது மிகவும் வரவேற்கப்பட வேண்டியதொன்றாகும். இந்திய வைத்யத்தில் எல்லாவிதமான அங்கங்களும் புத்தகங்களில் நன்கு எழுதப்பட்டு பாடபுத்தகமாக ஏற்பாடு செய்தால், இந்த நோக்கம் சுலபத்தில் நிறைவேறக் கூடியதுதான். ஆனால் எந்த வைத்யம் எந்த மொழியில் இருக் கிறதோ அந்த மொழியில் அறிவு ஏற்படுத்தப்படவேண்டும். கலாசாலையில் சேர்க்கப்பட்டபிறகுகூட பாஷா சாகித்தியத்திற்கும் மதிப்பு கொடுத்து அதில் பாடதிட்டம் இருக்கவேண்டும் இந்தப் படிப்பு படித்தவர்களுக்கு M. B. B. S.க்குச் சமமான சம்பளம் மதிப்பு இரண்டும் இருக்கவேண்டும். வெறும் நற்சான்று இதழ் மட்டும் இருந்தால் மட்டிலும் போதாது.

தற்சமயம் இந்தக் கௌன்ஸிலில் மெம்பர்களாக உள்ளவர்கள் மிகுந்த பொறுப்பு உள்ளவர்களாக இருக்கவேண்டும். இந்த இந்திய வைத்யமுறை உயர்ந்த நிலைக்குக்கொண்டு வரப்படும் வரை இவர்களின் மேதைக்கும் சிந்தனைக்கும் ஓய்வு இருக்கக் கூடாது. நமது தமிழ் நாட்டில் உயர்ந்த வைத்யர்கள் இதில் அங்கத்தினர்களாகப் பொறுக்கி எடுக்கப்பட்டுள்ளனர். அதைப் பற்றி நாம் பாராட்டுகிறோம். அதிலும் மிக்க அனுபவமும் அறிவும் படைத்த Dr. V. நாராயணசாமி அய்யர், Dr. உத்தமராயன், Dr. குருசிரோமணி முதலானோர்கள் அங்கம் வகிப்பது தமிழ் நாட்டின் வைத்ய அபிவிருத்திக்கு வழிகாட்டியாக அமைந் துள்ளது. வருங்காலத்தை இருள் நீங்கியதாக எதிர்பார்க்கிறோம்.

———

பிரயோகஸாரம்

மூன்ருவது படலம்

பாலரக்ஷை

1. குழந்தை பிறந்த முதல் நாளன்று பாலகனை தமநீ என்ற கிரஹம் பீடிக்கும். அதனுல் குழந்தையினிடத்தில் காணும் மாறுதல்கள் உடல் தூக்கிப் போடுதல், உணவு ஏற்காமை, உமிழ்நீர் பெருகுதல், கழுத்தை ஒடித்து திருப்புதல் ஆகும். இதற்கு தேவதைக்கு பலி கொடுக்கவும், காட்டத்திப்பூ, லோத்திரப்பட்டை, மஞ்சிட்டி, கருஞ்சந்தனம் இவைகளை அரைத்துப் பூசுவதும், மஹிஷாக்ஷி குக்குலுவைத் தூபமிடுவதும் அந்தப் பீடையைப் போக்கும்

2. இரண்டாவது நாள் பீஷணீ என்ற கிரஹம் பீடிக்கும். அதனுல் ஏற்படும் சேஷ்டைகள் இருமல், பெருமூச்சு, உடலைக் குலுக்கிக்கொள்ளுதல் அழுகையாகும். வசம்பு, நாயுறுவிவிதை பதிமுகம் இவைகளை ஆட்டு மூத்திரத்தை விட்டரைத்துத் தடவுவதும் பசுவின் கொம்பு எயிறு, இவைகளைத் தணலில் போட்டு தூபமிடவும் பீடை விலகும்:

3 மூன்ருவது நாள் கண்டாலி பீடிக்கும். அதனுல் ஏற்படும் சேஷ்டைகள் அருசி, பரபரப்பு, இருமல், மூச்சுச் திணரல், நாவரட்சி ஆகும். ஆட்டுப்பாலில் யானையின் பல், பசுவின் பல், நாகாஞ்ஜனம் இவைகளை அரைத்துப் பூசுவதுடன் கடுகு இலை வேப்பிலை இவைகளை தூபமிட பீடை விலகும்.

4. நான்காவது நாள் காகோலி பீடிக்கிருள். அதனுல் அழுகை, பரபரப்பு, நுரைக்கக்குதல் முதலிய பயங்கர சேஷ்டைகள் ஏற்படும் யானை தந்தம், பாம்புச் சட்டை, கடுகு இவைகளை கோமூத்திரத்தில் அரைத்துப் பூசி கடுகையும் வேப்பங்கொட்டையையும் தூபமிட, பீடை விலகும்.

5. ஐந்தாவது நாளில் அஹங்காரீ பீடிக்கும். அதன் குறிகள் கொட்டாவி, பெருமூச்சு, கை இறுகிப் பிடித்தல், மேல் நோக்கி விழித்தல் ஆகும். மனேசிலை தாளகம் வசப்பு லோத்திரப் பட்டை, கர்கடசிங்கி இவைகளை அரைத்துப் பூசுதலும், உள்ளிப் பூண்டு, வேப்பங்கொட்டை, கடுகு இவைகளின் தூபமும் நல்லது.

6. ஆருவது நாளில் பட்காரீ பீடிக்கும். அதன் குறிகள் - உடல் குலுக்கல், சிரிப்பு, அழுகை, மயக்கம் ஆகும். கோஷ்டம், குக்கில், கடுகு, யானை தந்தம் இவைகளை நெய் சேர்த்துப் பூசுவதும் தூபமிடுவதும் நல்லது.

7. ஏழாவது நாளில் முக்தகேசி பீடிக்கும். அதன் குறிகள் - இருமல், நாற்றம், சத்தமிடுதல், அழுகை, கொட்டாவியாகும். லவங்கப்பட்டை, கோஷ்டம் வசம்பு இவைகளை அரைத்து கோமூத்திரத்துடன் பூசுதலும், நாகணத்தை நெய் சேர்த்துத் தூபமிடுதலும் நல்லது.

8. எட்டாவது நாள் திரிதண்டினீ பீடிக்கும். அழுகை, பரபரப்பு, திக்குகளை வெறித்துப்பார்த்தல், அடித்துக்கொள்ளுதல் இவை அதன் குறிகள். வசம்பு, பூண்டு, கடுகு, காயம் இவைகளை தூபமிட்டு மேல் பூச நல்லது.

9. ஒன்பதாவது நாள் அஜமேஷா பீடிக்கும். அழுகை, பரபரப்பு, இரண்டு முட்டிகளையும் கவ்வுதல் இவை குறிகள். தகரவிதை (அஸாருன்) சந்தனம், கோஷ்டம், வசம்பு, கடுகு இவைகளை அரைத்துப் பூசுவதும், நாகணம், குரங்கு ரோமம் இவைகளைத் தூபமிடுவதும் நல்லது,

10. பத்தாவது நாள் ரோதினீ பீடிக்கும். இருமல், பெருமூச்சு, நல்மணம், உடல் நீலம் பாரித்தல் இதன் குறிகள். கோஷ்டம், வசம்பு, ஸர்ஜரஸம், கடுகு, இவைகளை அரைத்துப் பூசுவதும் வேப்பம்கொட்டையால் தூபமிடுவதும் நல்லது

இவை தினமும் பிடிப்பவை. மீன், மாம்சம், கள்ளு இவைகளைப் பலியாக இரவில் படைக்கவும் வேண்டும். நாயுருவித் தளிர், விலாமிச்சை, சந்தனம் இவைகளைக் கஷாயமிட்டு நாலு தடவை மந்திரித்து மூன்று வேளையும் குழந்தைக்குக் குளிப்பாட்டவேண்டும். தூபத்தையும் லேபத்தையும் 30 நாட்கள் தொடர்ந்து செய்யவேண்டும்.

11. முதல் மாதத்தில் சகுனி பீடிக்கும், இருமல், அழுகை, பெருமூச்சு, கடுமணம், கண்மூடிக்கொள்ளுதல் மல மூத்திரங்களுடன் ரத்தம் வெளியாதல் முதலியவை குறிகள். பாயசத்தை மூன்றுவிதத் துணைப்பொருள்கள், எண்ணெய் விளக்கு. ஆஸவம், நான்குவித பாயஸங்கள், மஞ்சள் வஸ்திரம் இவைகளுடன் தெற்கு திக்கில் புங்கமரத்தடியில் 7 நாள் பலியிடவேண்டும். நாகணத்தையும் பசுவின் பல்லையும் தூபமிடவும் குணமாகும்.

12. இரண்டாவது மாதத்தில் மகுடா பீடிக்கும். கழுத்தைத் திருப்பிக்கொள்ளுதல், உடல் ஆடாதிருத்தல், மஞ்சள் நிறமடை

தல், குளிர்ந்து போகுதல், நாவரட்சி, ஏப்பம், அருசி இவை ஏற்படும். பாலன்னம் எள்ளுப்பொடி, அப்பம், பாசிப்பயறுச் சுண்டல், கருத்தபூ, கருத்த வஸ்திரம் இவைகளுடன் பலியிடவேண்டும். குசும்பா எள்ளு, உள்ளிப்பூண்டு, வேப்பங்கொட்டை இவைகளைத் தூபமிடவேண்டும். குணமாகும்.

13. மூன்றுவது மாதத்தில் கோமுகி பீடிக்கும். அழுகை, தூக்கம், எப்போதும் மல மூத்திரம் வெளியாகிக் கொண்டிருத்தல், பசு, தேன் இவைகளின் நாற்றம் இவை குறிகள். ஞாழல், எள்ளு, கொள்ளு, பிட்டு, கொழுக்கட்டை, செம்பரத்தைப்பூ, இவைகளுடன் மத்தியானத்தில் பலியிடவும். கடுகும் நல்லெண்ணெயும் சேர்த்து தூபமிடவும். குணமாகும்.

14. நான்காவது மாதத்தில் பிங்களா பீடிக்கும். பால் குடிக்க விருப்பமின்மை, சில்லிப்பு, கைத்துடிப்பு, நாவரட்சி, வாய் நாற்றம், அழுகை இவை குறிகள். இதற்கு சிகித்ஸை கிடையாது

15. ஐந்தாவது மாதத்தில் படவா பீடிக்கும். அருசி, இளைப்பு, நாவரட்சி, அழுகை இவை குறிகள். அரிசி அன்னம், மீன் மாமிசம், மாப்பண்டங்கள் இவைகளை நடுப்பகலில் தெற்கு திக்கில் பலியாகக் கொடுக்க நல்லது.

16. ஆறுவது மாதத்தில் பத்மா பீடிக்கும். வயிற்றுவலி, தொண்டைக்கம்மல், அழுகை இவை குறிகள். மயில், கோழி, ஆடு இவைகளின் மாம்சமும், உளுந்து அன்னமும் கள்ளும் கொள் அன்னமும் பலி கொடுக்க விடும்.

17. ஏழாவது மாதத்தில் சீதளா பீடிக்கும். உணவு ஏற்காமை, கை கால் உருதல், ஜாதிப்பூமணம், இருமல், அழுகை, பல் நடுக்கம் இவை குறிகள். மாமிசம் கலந்த உணவு, கீரை, கொள்ளு, கள்ளு, அப்பம், எள்ளு இவைகளைக்கொண்டு இரவில் பலியிடவிடும்.

18. எட்டாவது மாதத்தில் யமுனை பீடிக்கும். உடல் முழுதும் சிறிய கொப்பளம் நடுக்கம், மயக்கம், நாவரட்சி, உடற் சூடு, இவை குறிகள். இதற்கு சிகித்ஸை கிடையாது.

19. ஒன்பதாவது மாதத்தில் கும்பகர்ணிகா பீடிக்கும் அருசி, வாந்தி, ஜ்வரம், பாதிரிப்பூமணம் இவை குறிகள். கொள்ளு, பால், மீன், மாமிசம் ஆட்டு மாமிசம், கள்ளு, ஆஸவம் இவைகளை வட கிழக்கில் நடுப்பகலில் பலியிட விடும்.

20. பத்தாவது மாதத்தில் தாபநீ பீடிக்கும். உடல் உதறுதல், பாலில் வெறுப்பு, கண் மூடுதல் இவை குறிகள். மஞ்சள்

சிவப்பு நிறத்து அன்னம், அப்பம், மீன் மாமிசம், கள்ளு, சாராயம், மாப்பண்டங்கள், மணி, கொடி இவைகளுடன் வடக்கில் நடுப் பகலில் பலியிடவும். பீடை விலகும்.

21. பதினோராவது மாதத்தில் ராக்ஷஸீ பீடிக்கும். பார்வை இழத்தல் இதன் குறி. சிகித்ஸை கிடையாது.

22. பன்னிரெண்டாவது மாதத்தில் சாலிகா பீடிக்கும். அருசி, மூச்சுத்திணறல், நடுங்குதல் குறிகள். தயிர் சாதம், எள்ளும் கொள்ளும் சேர்ந்த கொழுக்கட்டை இவைகளை கிழக்கில் நடுப்பகலில் பலியிடவிடும். இவை மாதந்தோறும் பீடிக்கும் பூதனை என்ற கிரகங்கள். முன் குறிப்பிட்டபடி பலியிட்ட பிறகு நால்பால் மரப்பட்டை கஷாயத்தால் குளிப்பாட்டவும்.

23. முதல் ஆண்டில் நந்திநீ என்ற கிரஹம் பீடிக்கும். அருசி, கண்ணுருட்டுதல், உடல் எரிவு, அழுகை, பூமியில் விழுதல் முதலியவை குறிகள். வெல்லப் பொங்கல், தயிர், கொள்ளுப் போளி, சாராயம், எள்ளுப்பொடி, மாமிசம் இவைகளை கிழக்கு திக்கில் பலியிட்டு மனித ரோமம், பசுவின் குளம்பு, பல் இவைகளை தூபமிட விலகும்.

24. இரண்டாவது ஆண்டில் ரோதிநீ பீடிக்கும். மூத்திரத்துடன் ரத்தம், ஜ்வரம், வயிறுப்புதல், தாமரைக் கேசர நிறம், அழுகை, கையுதறுதல் இவைகள் குறிகள். எள்ளு, குக்கில், கொள்ளு, வெல்லப் பொங்கல், தயிறு, கொழுக்கட்டை, ஊறுகாய், பழம் இவைகளுடன் கிழக்கு திக்கில் பலியும், பாம்புச் சட்டை, வெண்கடுகு இவைகளின் தூபமும் நல்லது.

25. மூன்ருவது ஆண்டில் தனதா பீடிக்கும். கண் திறந்திருந்து மலங்க விழித்தல், உணவின்மை, ஜ்வரம், இளைப்பு, களைப்பு இடதுகால் துடிப்பு இவை குறிகள். தயிர், மாமிசம், கள்ளு, மீன் பயறன்னம், எள்ளுப்பொடி, இவைகளுடன் பலகையில் பிரதிமை அடித்து வடக்கில் பலியிடவும். மயில் தோகை, மான் அல்லது பசுவின் குளம்பும் ரோமமும் தூபமிடவிடும்.

26. நான்காவதாண்டில் சஞ்சலா பீடிக்கும். ஜ்வரம், நடுக்கம், அசதி இவை குறிகள். எள்ளு, கரு நிறத்திலுள்ள அன்னம், கருப்புத்துணி இவைகளுடன் பலியிடவும். ஆட்டுக் கொம்பால் தூபமிட விடும்.

27. ஐந்தாவதாண்டில் தர்த்தநீ பீடிக்கும். பயம், அடிக்கடி சிறுநீர் பிரிதல், அசதி, நாவரட்சி, தன்வசமிழத்தல் இவை குறிகள். மீன் முள்ளங்கி, மாமிசம் இவைகளை வேகவைத்து

எள்ளுப்பொடி, பால், பாயசம், கள்ளு, மோர்த் தெளிவு இவைகளுடன் பலியிடவும். ஏழு நாட்கள் கேசம், வெண்கடுகு, பூண்டு இவைகளைக்கொண்டு தூபமிடவும்

28 ஆறுவது ஆண்டில் யமுனு பீடிக்கும். அழுகை, ஏப்பம், சிரிப்பு, உணவில் வெறுப்பு இவை குறிகள். மீன், எள்ளுப் பொடி, போளி, பாயசம், தயிறு, கள்ளு, கொழுக்கட்டை இவைகளைக்கொண்டு நாற்சந்தியில் பலியிடவும். பசுவின் ரோமம், குளம்பு, கொம்பு இவைகளைக்கொண்டு தூபமிடவும்.

29. ஏழாவது ஆண்டில் ஜாதவேதா பீடிக்கும். சிரிப்பு, உணவில் வெறுப்பு இவைகள் குறிகள். மீன், மாமிசம், தயிர், தேன், நெய், பாயசம், பால், எள்ளுப்பொடி, ஜலம் இவைகளைக் கொண்டு பலியிடவும். வேப்பிலை, கடுகு இவைகளைக்கொண்டு தூபமிடவும். விடும்.

30. எட்டாவது ஆண்டில் நளினீ பீடிக்கும். கைகளைத் தட்டுதல், பதட்டம், கர்ஜனை இவை குறிகள் எள்ளுப்பொடி, அப்பம், கொள்ளு, பாயசம் இவைகளில் பலியிடவும். நாகனம், அஸாருன், கோஷ்டம், குக்கில் இவைகளை தூபமிடவும். பீடை விடும்.

31. ஒன்பதாவது ஆண்டில் கலஹம்ஸீ பீடிக்கும். எரிச்சல், இளைப்பு, ஜ்வரம் இவை குறிகள். போளி, அப்பம், தயிர் அன்னம் இவைகளை ஐந்து நாள் பலியிடவும். கோஷ்டம், வசம்பு, கடுகு, பூண்டு இவை லேபமாகவும், வேப்பங்கொட்டை, யானைத்தந்தம், பசுவின் ரோமம் இவைகளை தூபமிடவும்.

32. பத்தாவது ஆண்டில் தேவதூதி பீடிக்கும். குதித்தல், ஒய்யாரமாக நடத்தல், ஓடுதல், மலம் சிறுநீர் அடிக்கடி பிரிதல், விளையாட்டு, சிரிப்பு, தன் வீட்டைத் திரும்பி திரும்பிப் பார்த்தல், போகிறேன் போகிறேன் என்று சொல்லுதல். கண்வலி, இளைப்பு, எப்பொழுதும் குடிக்கவும் சாப்பிடவும் விருப்பம், கொடுமையான பேச்சு இவை குறிகள். கேழ்வரகு அன்னம், கொள்ளுப்போளி, தயிர், கொழுக்கட்டை, வெந்த மீன், சிகப்பு நிறமுள்ள மற்ற துணைப் பொருள்கள், அரளிப்பூ, இவைகளை மூன்று வேளையும் பலியிடவும். பீடை விலகும்.

33. பதினோராவது ஆண்டில் பாலிகா பீடிக்கும். இருமல், ச்வாஸம், கண்வலி, காக்கைபோன்ற குரல் இவை குறிகள். போளி, வெல்லம், கொள்ளு, முறுக்கு, காய்கறி, வெந்த மீன், பால் இவைகளை பலி கொடுக்கவும். வேப்பிலை, கடுகு இவைகளைக் கொண்டு தூபமிடவும்.

34 பன்னிரெண்டாவது ஆண்டில் வாயஸீ பீடிக்கும். வாயு வருதல், பல்கிட்டுதல் உடல் சோர்வு இவை குறிகள். சிவப்பு திரவியங்களைக்கொண்டு பலியிட. விடும்.

35. பதிமூன்ருவது ஆண்டில் யக்ஷிணி பீடிக்கும். குடல் மார்பு வலி, ஜ்வரம், அழுகை, கர்ஜனை இவை பீடைகள். அரிசி சாதம், கள்ளு, மாமிசம், மீன், கொள்ளு, பாயசம், எள்ளுப்பொடி இவைகளைக்கொண்டு நடுப்பகலில் மூன்று நாட்கள் பலியிடவும். நெய் தடவிக் குளிப்பாட்டவும். பீடை விலகும்.

36 பதினுன்காவது ஆண்டில் ஸ்வச்சந்தா பீடிக்கும் ரத்தப் பெருக்கு, தொப்புளில் வலி இவை குறிகள். சிகித்ஸை கிடையாது.

37. பதினைந்தாவது ஆண்டில் வாருணீ பீடிக்கும். ஜ்வரம், தூக்கம், கையாலாகாத தன்மை, கொள்ளு, எள்ளுப்பொடி, அப்பம், போளி, பாயசம், சாராயம், காட்டத்திப்பழம் இவைகளைக் கொண்டு பலியும், சந்தனத்தூள், நெய் சேர்த்து தூபமும் இட பீடை விலகும்.

38. பதினுருவது ஆண்டில் துர்ஜயா பீடிக்கும். சிரிப்பு, நடுக்கம், போகிறேன் என்று அடிக்கடி சொல்லுதல் இவை குறிகள். கொள்ளு, எள்ளுருண்டை, அப்பம், எள்ளுச்சாதம், அத்திக்காய், தயிர் இவைகளை கிழக்கில் மூன்று நாட்கள் பலியும், நாகனம், பசுவின் கொம்பு, பூண்டு இவைகளால் தூபமும் இட விடும்.

39. பதினேழாவது ஆண்டில் பாலிகா பீடிக்கும். வாந்தி, அருசி, நடுக்கம் இருமல், சுவாஸம் இவை குறிகள். சிகித்ஸை கிடையாது.

இந்த கிரஹங்கள் குமாரி என்று சொல்லப்படுபவை. ஆண்டுதோறும் பீடிப்பவை. பலியும் தூபமும் இட்டபின் புரசு அத்தி, அரசு, பில்வம், ஆல் இவைகளின் துளிரைக்கொண்டு கஷாயம் செய்து குளிக்கலாம். கடம்பு, புங்கு, தான்றி, வேம்பு, அரசு, அத்தி, நறுவிளி, ஆல் இவை மாத்ருகா விருக்ஷங்கள். பலியிடும்போது முறையே கிழக்கிலிருந்து ஆரம்பித்து வடகிழக்கு வரை இம்மரத்தடியில் பலிகளைக்கொடுக்கவும். குறிப்பிட்ட திக்கில் குறிப்பிட்ட மரம் இல்லையானுல் எங்கு வேண்டுமானுலும் கொடுக்கலாம். பலியிட்ட பிறகு ரக்ஷை கட்டவேண்டும்.

ஆரோக்கிய கல்பத்துருமம்

க்ஷய சிகித்ஸை

நாகபலா[1]வின் கஷாயத்தை தேனும் சர்க்கரையும் சேர்த்து தினம் காலையில் சாப்பிட்டு வரவேண்டும் அல்லது கொம்பரக்கும் நாகபலாவும் சேர்த்தோ, அல்லது அவ்விரண்டுடன் அதிமதுரமோ அல்லது சுக்கு ஜீரகம் அதிமதுரம் இவைகளோ, அல்லது திப்பிலியோ சேர்த்து கஷாயமிட்டு தேனும் சர்க்கரையும் சேர்த்துச் சாப்பிடலாம்.

சிறுபஞ்சமூல[2]த்துடன் சிற்றுமுட்டியும் வெள்ளைச்சாரணையும் சேர்த்து கஷாயமிட்டும் அல்லது தசமூலம்[3] அடபதியன் வேர் அமுக்கராக்கிழங்கு இவைகளைக் கஷாயமிட்டும் நிறையத் தேன் சேர்த்துக் கொடுக்கலாம். திராக்ஷை ஜீரகம் தசமூலம் கோரைக் கிழங்கு, புஷ்கரமூலம், இவைகளைக் கஷாயமிட்டு தேன் சேர்த்துக் கொடுக்கலாம். அல்லது திராக்ஷை முதலியவைகளை ஆட்டுப் பாலில் கலந்து ஸம ஜலம் சேர்த்து ஜலம் சுண்டும் வரை காய்ச்சி வடிகட்டியும் சாப்பிடலாம்.

---

1. நாகபலா-ஊரகம் என்று மலையாளத்திலும் யானைக்குறுந் தோட்டி எனத் தமிழிலும் வியவகாரமிருக்கிறது. ஆனால் இவ்விரு பெயரும் அதிபலா என்று வழங்கும் பொருளைக்குறிப்பிடும் எனக் கருதுபவருமுண்டு. நாகபலா என்பதால் மற்றொரு வகை சிற்றுமுட்டியான Sida Humilis என்ற பொருளைக் கிரஹிக்க வேண்டுமென வடதேசத்தில் பழக்கமிருக்கிறது. ஃபரீத்பூடி, புஇசிக்ஞு என்று வடதேசத்தில் பெயர். பூமியில் படரும் சிறிய செடி. செடி உற்பத்தியானவுடனேயே பாம்புபோல் வளைந்து படரும். இலை கூரான நுனியுடன் சீப்பி போன்று காணப்படும். மேல் மெல்லிய ரோமங்கள் காணப்படும். பூ மஞ்சள் நிறமாக இருக்கும் மாசி பங்குனி மாதங்களில் பழய இலைகள் உதிர்ந்தும், புதிய இலைகள் முளைக்காமலுமிருக்கும் காலத்தில் இதன் வேரை எடுத்து உபயோகிப்பது வழக்கம். Sida Spinosa என்ற மற்றொருவகை சிற்றுமுட்டியையும் உபயோகிப்பது உண்டு.

2. சிறுபஞ்ச மூலம், கண்டங்கத்திரிவேர், முள்ளுக்கத்திரி வேர், ஓரிலைவேர், மூவிலைவேர், நெரிஞ்சில் முள் இவ்வைந்தும்.

3. சிறு பஞ்சமூலமும், வில்வவேர், பாதிரிவேர், குமிழம்வேர், முன்னைவேர், பெருவாகைவேர்,

ஏலரிசி திப்பிலி அதிமதுரம் தசமூலம் சீந்திற்கொடி இவைகளைக் கஷாயமிட்டு மேம்பொடியாக திப்பிலி, ஜீரகம். சர்க்கரை சேர்த்து தேனும் கலந்து சாப்பிடலாம். சீந்திற்கொடி தேவதாரு காஞ்சூரி வேர், சிறு தேக்கு, ஆடாதோடை, மூக்கரட்டை வேர், தசமூலம், சிற்ருமுட்டி, பஞ்சகோலம்[1], புங்கிலை இவைகளின் கஷாயம் தேன் சேர்த்துச் சாப்பிட நல்லது. அல்லது விதார் யாதிகண கஷாயமும் தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

விதார்யாதிகணம் :

நிலப் பூசனிக் கிழங்கு, (பால்முதுக்கன்) நன்னாரி வேர், வெள்ளைச்சாரணை வேர், தேள்கொடுக்கின்வேர், தேவதாரு, காட்டுளுந்து வேர், காட்டுப்பயற்றுவேர், பூனைக்காலிவேர், சிறு புள்ளடி, ஆமணக்கின் வேர், கண்டங்கத்திரி வேர், முள்ளுக்கத் திரி வேர், ஓரிலை வேர். மூவிலை வேர், நெரிஞ்சில் முள்ளு, ஜீவகம், ருஷபகம், (கிடைக்காவிடத்து இவ்விரண்டிற்கும் பதிலாக பால் முதுக்கன் கிழங்கு) கோவைக் கிழங்கு, தண்ணீர்விட்டான் கிழங்கு அடபதியன் கிழங்கு இவைகளுக்கு விதார்யாதிகணம் எனப்பெயர். வாதபித்த தோஷங்களைப் போக்கி, ஹ்ருதயத் திற்கு பலமளிக்கவல்லது. இளைப்பு குல்மம், மேல் சுவாஸம், உடல்வலி, காசம் இவைகளைப் போக்க வல்லது.

ஜம்பீரநவனீதம் :

ஒரு எலுமிச்சம்பழத்தை நிறுத்து அதற்கு மூன்று பங்கு எடை வெண்ணெய்யை அதன்மேல் பூசி தினம் காலையில் ஜலத்திலிட வும். மறுநாள் காலை ஜலத்தை மாற்றி விடவும். இவ்விதம் பதினைந்து தினங்கள் செய்து பிறகு எலுமிச்சம்பழத்தின் மேலுள்ள வெண்ணெய்யை சர்க்கரை அல்லது தேன் சேர்த்துச்சாப்பிடவும். நல்ல பசியும் ஜீர்ணசக்தியும் உண்டாகும் தாதுக்களை பூரணம் செய்து பலமுண்டாக்கும். க்ஷயம் இளைப்பு நீங்கும்.

திராக்ஷாதி கிருதம் :

திராக்ஷை, அமுக்கராக்கிழங்கு, நாட்டு நிலவேம்பு, நிலைப் பனைக்கிழங்கு, இவை வகைக்கு 30 தோலா எடுத்து 16 பங்கு ஜலத்தில் கஷாயமிட்டு வடிகட்டிக்கொள்ளவும். பசுவின் நெய் 1 கிலோ; ஆட்டுப்பால் முக்கால் லிட்டர்; கல்கமாக வாழைப்பழம், கடுக்காய், ஏலரிசி, ஜீரகம், சுக்கு, திப்பிலி, மிளகு, இந்துப்பு இவை வகைக்கு 30 கிராம். இவைகளை முறைப்படி நெய்யாகக் காய்ச்சி வடிகட்டி சர்க்கரை 300 கிராம் சேர்த்துக்கொள்ளவும். தேக புஷ்டி தாதுபுஷ்டி அளித்து க்ஷயம் மயக்கம் இவைகளைப் போக்கும்.

---

1. பஞ்சகோலம், திப்பிலி, கண்டந்திப்பிலி, செவ்வியம், கொடிவேலி வேர் பட்டை, சுக்கு இவ்வைந்துமாகும்.

புனர்னவாதி கிருதம் :

மூக்கரட்டை, மஞ்சள், விலாமுச்சம்வேர், இஞ்சி, அதிமதுரம், கோஷ்டம், சந்தனம், வட்டத்திருப்பி, கோரைக்கிழங்கு, கண்டந் திப்பிலி, பர்பாடகம் இவை வகைக்கு 10 கிராம் எடுத்து நெல்லிக் காய்ச்சாறு அல்லது கஷாயம் விட்டரைத்துக் கல்கமாக்கிக் கொள்ளவும். நெய் $1\frac{1}{2}$ லிட்டர் ஆட்டுப்பால் $1\frac{1}{2}$ லிட்டர் இவைகளைச் சேர்த்து முறைப்படி நெய் காய்ச்சி வடிகட்டிக்கொள்ளவும். அதில் 300 கிராம் சர்க்கரையும் 150 கிராம் தேனும் சேர்த்துக் கலக்கிக் கொண்டு, தினமும் சாப்பிட்டு வர க்ஷயம் குறையும்.

உரக்ஷதத்தில் :

சரீர பலத்திற்கேற்றதல்லாத ஸாஹசச் செயல்களைப் புரிவ தால், மார்பின் உட்புறத்தில் சுவாஸாசயத்தின் மேல்புறங்களில் புண் ஏற்பட்டு வலி, ரக்தம் வாய்வழியே வெளியாகுதல் போன்ற உபத்ரவங்கள் ஏற்பட்டு மிகுந்த வேதனையளிக்கும். இந்நிலையின் ஆரம்பத்தில் கொம்பரக்குத்தூளைத் தேனில் குழைத்துச் சாப்பிட நல்லது. கோதுமையைக் கஷாயமிட்டு தேன் சேர்த்து காலை வேளையில் சாப்பிட நல்லது.

காமலையில்

வாய்விடங்கம் வேப்பம்பூ வட்டத்திருப்பி பெருங்குரும்பை வேர் இவைகளில் ஒன்றைப் பொடித்து நெய் சேர்த்து விடியற் காலையில் சாப்பிட பாண்டுவும் காமலையும் குறையும். மாவின் துளிரை இளநீர் விட்டரைத்துக் குழப்பிச் சாப்பிட காமலை குறை யும் மூக்கரட்டை வேரை அரைத்து இளநீரில் குழப்பி சர்க்கரை சேர்த்து சாப்பிடலாம். இரும்பு தூளைக் கருப்பஞ் சாற்றில் இட்டு சர்க்கரை சேர்த்துச் சாப்பிடலாம்.

திராக்ஷைசீந்தில் கரும்பு இவைகளின் கஷாயம் தேனும் சர்க்கரையும் சேர்த்தும், ஆடாதோடை வேர், நாமக் கரும்பு அதி மதுரம் இவைகளின் கஷாயம் தேனும் சர்க்கரையும் சேர்த்தும் சாப்பிடலாம்.

தோஷ பலத்தை அனுஸரித்து திராக்ஷை மூக்கரட்டைவேர் கடுக்காய் இவைகளைக் கஷாயம் வைத்து தேன் சேர்த்து லகு வான விரேசனம் செய்யலாம். கீழாநெல்லியை ஸமூலமரைத்து அடிக்கடி முகர்ந்து வரலாம். தலையில் கருசலாங்கண்ணிச் சாற்றை தாரையிடலாம். தும்பைப்பூவை அரைத்து, கறந்து சூடாருத பாலில் கலக்கிச் சாப்பிடலாம். நீல நிறமுள்ள கரந்தை இலைச் சாற்றை பால் சேர்த்துச் சாப்பிடலாம். கோவைக்கிழங்கை அரைத்து மோரில் ; இலந்தை விதையை அரைத்து மோரில் ; பசுவின் பாலில் வெல்லம் போட்டுச் சாப்பிட காமலை குறையும்.

அஞ்சனக் கல்லோ, விரளி மஞ்சளோ, காவி மண்ணோ, நெல்லிக்காயோ, மஞ்சள் காவி மண், நெல்லிக்காய் இவை மூன்றும் சேர்த்தோ, தும்பைப்பூச்சாற்றுடன் சாப்பிட நல்லது. இலந்தை இலையை அரைத்து எருமை மோரில் கலக்கிக் கொடுக்கலாம். அதிமதுரம், நெல்லிக்காய் இவைகளின் சூர்ணத்தைத் தேனில் குழைத்துச் சாப்பிடலாம். கடுக்காய் செவதை இவைகளின் சூர்ணத்தை சர்க்கரை தேன் சேர்த்துச் சாப்பிடலாம்.

ச்ரேஷ்டாதி கிருதம்.

திரிபலை, சீந்திற்கொடி, கீழாநெல்லி ஸமூலம், வேம்பின் பட்டை, மரமஞ்சள் தோல் இவைகளை கடுக்காய் கஷாயத்தில் அரைத்துக் கலக்கி நெய்யும் பாலும் ஸம அளவு சேர்த்துக் காய்ச்சி சர்க்கரையை பாத்திர பாகமாகப் போட்டு தனியாகவும் உணவுடனும் குறைந்த அளவில் சாப்பிட நல்லது

லோஹசூர்ணாதி குளிகை

இரும்புத் தூள், மஞ்சள், மரமஞ்சள், தேத்தான்வித்து, த்ரிபலை, காவி மண், சந்தனம், செஞ்சந்தனம், திரிகடு, ஏலரிசி, மாதுளை ஓடு, கோரைக் கிழங்கு இவை வகைக்கு சமனெடை, இவைகளைத் தூள் செய்து கீழாநெல்லி இலை பசுமஞ்சள், இலந்தை இலை, அம்பாடம் இலை இவைகளின் சாற்றிலும், இளநீரிலும், சிற்றீந்தில் வேர் கஷாயத்திலும் முறையே பாவனை செய்து அரைத்து குந்துமணி அளவு மாத்திரை உருட்டி நிழலிலுலர்த்தி இளநீருடன் கொடுக்க நல்லது.

கும்ப காமலையில்

கோமூத்ர சிலாஜது, பேய்ப்புடல் வேர், அவுரி வேர் இவைகளில் ஒன்றை கோமூத்ரத்தில் கலக்கிச் சாப்பிட நல்லது.

வேப்பம்பட்டை, திரிபலை, அதிமதுரம், மஞ்சள், நன்னாரி, ஆடாதோடை. கருஞ்செவதை, கீழாநெல்லி, அவுரி வேர், சித்தாமுட்டி வேர், ஒரிலை வேர், சீந்திற்கொடி, பேய்ப்புடல், இவைகளைக் கஷாயமிட்டு தேன், கோமூத்ர சிலாஜது, திப்பிலி இவைகளை மேம்பொடியாகச் சேர்த்துக் கொடுக்க நல்லது.

சோதத்தில் சிகித்ஸை

உடல் முழுதுமோ ஒரு அங்கத்தில் மட்டுமோ நீர் எதிர்த்து ஏற்படும் வீக்கம், சோபம் அல்லது சோதம் எனப்படும்.

ஸர்வாங்க சோதத்தில்

உடல் முழுவதும் நீர் எதிர்த்து வரும் சோதங்களில் கீழ்க் கண்டவாறு சிகித்ஸை செய்யலாம். பொதுவாக சிசுவை முதலில் ஆமணக்கெண்ணெய்யை கோமூத்ரம் அல்லது பாலுடன் சேர்த்துக் கொடுத்து விரேசனம் செய்ய நல்லது.

வாதத்தால் ஏற்படும் சோதத்தில்

வில்வ வேர், குமிழன் வேர், முன்னை வேர், பாதிரி வேர், பெரு வாகை வேர் இவை வகைக்கு ஒரு பங்கு மூக்கரட்டை வேர், 5 பங்கு, சுக்கு 2 பங்கு இவைகளை சேர்த்து கஷாயமிட்டு கொடுக்கலாம், அல்லது ஆமணக்கின்வேர், மூக்கரட்டைவேர், அரத்தை, வில்வ வேர், கடுக்காய், நீர்முள்ளி வேர் இவைகளைக் கஷாயமிட்டு திப்பிலி, சர்க்கரை மேம்பொடி சேர்த்துக் கொடுக்க நல்லது.

பித்தத்தால் ஏற்படும் சோதத்தில்

ஓமம், கோரைக் கிழங்கு, ஓரிலை வேர், நெல்லிமுள்ளி, கொத்து மல்லி விதை மூக்கரட்டை வேர் இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து சர்க்கரை போட்டுக் கொடுக்கலாம். அல்லது வேப்பம் பட்டை, நில வேம்பு, பேய்ப் புடல், கோரைக்கிழங்கு, நெரிஞ்சில் விதை, மூக்கரட்டை வேர் இவைகளைக் கஷாயமிட்டு இரும்புத் தூள் சேர்த்துச் சாப்பிட நல்லது.

கபத்தால் ஏற்பட்ட சோதத்தில்

தேவதாரு, மூக்கரட்டை வேர், நெரிஞ்சில், இஞ்சி, கொத்து மல்லி விதை இவைகளைக் கொண்டு கஷாயம் வைத்து தேன் சேர்த்துச் சாப்பிடலாம். அல்லது இலந்தை விதை, இஞ்சி. திப்பிலி, முன்னை வேர், ஆமணக்கின் வேர், மூக்கரட்டை வேர், ஏலரிசி, சுக்கு இவைகளைக்கொண்டு கஷாயம் வைத்து தேனும், திப்பிலியும் மேம்பொடி சேர்ந்துக் கொடுக்கலாம்.

ஸந்நி பாதத்தால் ஏற்பட்ட சோதத்தில்

சீந்திற்கொடி 6 பங்கு, கடுக்காய் 4 பங்கு, சுக்கு 2 பங்கு, மூக்கரட்டை 12 பங்கு இவைகளை இடித்துக் கஷாயமிட்டு ஆமணக்கெண்ணெயும் சேர்த்துச் சாப்பிட எல்லாவிதமான வீக்கமும் தணியும், அல்லது கடுக்காய், மூக்கரட்டை வேர், தேவதாரு, திப்பிலி, கண்டந் திப்பிலி, கொடிவேலி வேர் வேர் பட்டை. விரளி மஞ்சள், ஜீரகம், வெட்டி வேர், சுக்கு இவைகளைக் கஷாயமாக்கி, ஏலரிசியும நெரிஞ்சில் முள்ளும் மேம்பொடி சேர்த்து தேன், சர்க்கரை கலந்து சாப்பிடலாம்.

சுண்டியாதிகாஷயம்

சுக்கு, நில வேம்பு, சிறுகாஞ்சூரி வேர், நாயுருவி வேர் இவை வகைக்கு ஒரு பங்கு, மூக்கரட்டை வேர் 4 பங்கு இவைகளைக் கஷாயமிட்டு சர்க்கரை சேர்த்துச் சாப்பிட நல்லது.

திந்திரிணீகஷாயம்

புளிய இலைக் காம்பு, இரும்புத் தகடு, கடுக்காய், கரும்பு, வில்வ வேர். மூக்கரட்டை வேர் இவைகளைக் கஷாயமிட்டுக் கொடுக்கலாம்.

புனர்னவாதி கஷாயம்

மூக்கரட்டை வேர், கடுக்காய், சுக்கு, கருவேப்பிலை இவைகளின் கஷாயம் நல்லது.